# கத்தரி சாகுபடி

காய்கறி பயிர்களில் முக்கியத்துவம் வகுப்பது கத்தரி. உலகெங்கும் பயிர் செய்யபடும் இக்கத்தரி அனைத்து வயதினரும் விரும்பி உண்ணும் பயிராகும். பழுக்காத கத்தரிக்காயே சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதில் அதிக அளவில் சத்துப்பொருட்களான வைட்டமின் ஏ மற்றும் பி இருக்கின்றது. இந்தியாவில் 5 லட்சம் எக்டேரில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. அதனுடைய மகசூல் ஏக்கருக்கு 10-12 டன் கிடைக்கிறது. கத்தரி நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**இரகங்கள்**

கோ 1 (முட்டை வடிவம் / வெளிர்பச்சை நிறம்)

எம்.டி.யூ 1 (ஊதா நிறம் உருண்டை வடிவம்)

கோ 2 (ஊதாவரிகள், நீர் உருண்டை வடிவம்)

பி.கே.எம். 1 (பச்சை வரிகள், நீள் உருண்டை வடிவம்)

பாலூர் 1 (ஊதா நிறம், முட்டை வடிவம்)

கே.கே.எம்.1 (வெள்ளை நிறம், முட்டை வடிவம்)

**மண் மற்றும் தட்பவெட்பநிலை**

நல்ல வடிகால் வசதியுள்ள அங்ககப் பொருட்கள் நிறைந்த கார அமிலத்தன்மை 6.5-7.5 உள்ள மண் ஏற்றது.

**பருவம்** : மே-ஜுன், டிசம்பர்-ஜனவரி

**விதையளவு**

160 கிராம்/ஏக்கர் – ரகங்களுக்கு

40 கிராம்/ஏக்கர் – வீரிய ஒட்டு ரகங்களுக்கு

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி கலந்து பிறகு அசோஸ்பைரித்தை 80 கிராம் ஆறிய அரிசி கஞ்சியை சேர்த்து விதை நேர்த்தி செய்தல் வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் (அ) கேப்டனான் கலந்தும் விதைக்கலாம்.

**நடவு முறை**

சுமார் 2 சென்ட் பரப்புடைய மேட்டுபாத்தி நாற்றங்காலில் விதைவிதைத்து பின் பார்களில் 40-45 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி**

75 செ.மீ. (அ) 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து 60 செ.மீ. இடைவெளியில் செடிகளை நடவு செய்ய வேண்டும்.

**அடிஉரம்**

கடைசி உழவின்போது ஏக்கருக்கு தொழுஉரம் 10 டன், யூரியா-44 கிலோ, சூப்பர் பாஸ்பேட் - 120 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ்-32 கிலோ இட்டு நன்கு உழவு செய்து பார்கள் எடுக்க வேண்டும்.

**மேலுரம்**

நடவு செய்த 30வது நாள் மேலுரமாக ஏக்கருக்கு 44 கிலோ யூரியா செடியிலிருந்து 5-10 செ.மீ. தள்ளி இட வேண்டும்.

**பின்செய் நேர்த்தி**

நடவு செய்த ஒரு மாதம் கழித்து கை களை எடுத்து மண் அணைத்தல் வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

சாம்பல் கூன்வண்டு, தண்டு மற்றும் காய்ப்புழு இவற்றை கட்டுப்படுத்த நட்ட 15ம் நாளில் டெமிக் குருணை இட்டு பின் 15 நாட்கள் இடைவெளியில் 1 லிட்டர் நீருக்கு 1.5 மி.லி எண்டோசல்பான் 35 EC. அல்லது செவின் 50 சதத்தூள் 2 கிராம் 1 லிட்டர் நீர் என்ற அளவில் மாறி மாறி தெளிக்கவும்.

**அறுவடை**

நட்ட 60வது நாளிலிருந்து 5 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம்.

**மகசூல்** : ஏக்கருக்கு 10-12 டன்

**வயது** : 150 நாட்கள்

**சிறப்புத் தொழில்நுட்பங்கள்**

நட்ட 15ம் நாளும் மற்றும் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் டிரைகான்டினால் 2 பி.பி.எம் மற்றும் போரான் 4 பி.பி.எம் தெளித்து மகசூலை அதிகரிக்கலாம்.